NEW WAY OF BEING CHURCH

newbec

28 ஜூலை 2024
பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
முதியோர் மற்றும் நோயுற்றோரை அக்கறையுடன் பராமரித்தல்

# எஞ்சிய 12 கூடைகள்

நம்முடைய அனைத்துத் தேவைகளையும் கடவுள் நிறைவு செய்வதால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர் நம் உடலுக்கும் ஆன்மாவுக்கும் உணவளிக்கிறார். இன்றைய முதல் வாசகத்தில் எலிசா இருபது வாற்கோதுமை அப்பங்களை நூறுபேரும் உண்ணுமாறு பகிர்ந்தளிக்கிறார். இந்த நிகழ்ச்சி, ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐந்தாயிரம் பேருக்கு உணவளிக்கப்போகும் அருளடையாளத்தை முன்னறிவிக்கிறது.

பசியால் வாடிய ஐயாயிரம் மக்களுக்கு சிறிது அப்பத்தையும் மீன்களையும் மட்டுமே கொண்டு இயேசு செய்த மாபெரும் அற்புத அருளடையாளமிது. இயேசுவின் தெய்வீகத்தையும் அதிகாரத்தையும் காட்டும் அடையாளங்களில் இதுவும் ஒன்று. எவ்வாறு எலிசா மக்கள் உண்டபின்னும் மீதம் இருக்கும் என்று சொன்னாரோ அவ்வாறே இங்கும் நிகழ்ந்தது. இயேசுவின் காலத்தின் 12 பெரிய கூடைகள் நிறைய மீதம் இருந்தது. இது மிகவும் திகைப்பூட்டக்கூடியது. இருந்தாலும் இதை ஆண்டவர் தான் செய்தார். நம்முடைய கடவுள் மிகுதியாகத் தரும் கடவுள். அவர் நம்முடைய எதிர்ப்பார்ப்புக்கும் அப்பாற்பட்டு மிகவும் தாராளமாக நம்மை நிறைவுசெய்கிறார்.

அருளடையாளம் என்பது உணவைப் பெருக்குவது மட்டுமல்ல. இதில் அவருடைய சீடர்களின் பங்கு என்னவாக இருந்திருக்கும்? உணவைப் பகிர்ந்தளித்தார்கள். இயேசு அவர் செய்த அருளடையாளத்தில் சீடர்களின் பங்கும் இருக்கவேண்டுமென்று விரும்பினார். இந்த உலகில் இயேசுவின் பணியை திருஅவையிலும் சமூகத்திலும் நிறைவேற்றிட நம்முடைய ஈடுபாடும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியம். அதுமட்டுமின்றி, பெருந்திரளான மக்கள் மீது இயேசு கொண்டிருந்த இரக்கத்தை நம்மால் உணரமுடியும். அவர்களின் பசி வயிற்றுக்கானது மட்டுமல்ல. ஆன்மீகப் பசியும் கூட. அவர்களோடு அமர்ந்து அவர்களுக்குக் கற்றுத்தரும் ஒருவரை அவர்கள் பின்தொடர்ந்து வந்தனர். அவர்களின் தேவை இயேசுவுக்கு முன்பும் அவரின் சீடர்களின் முன்பும் இருந்தது. அங்கு எஞ்சியிருந்த பன்னிரண்டு கூடைகளும் அவர்களிடம் இதுவரை இல்லாத மனநிறைவையும் முழுமையையும் பிரதிபலிக்கிறது. அது இப்போது இயேசுவுடனான உறவில் மட்டுமே காணப்படுகிறது.

இயேசு அப்பத்தைப் பரிமாறுவதற்கு முன் நன்றி செலுத்தி ஆசீரவதித்தார். இங்கே நாம் ஒரு இணையான நிகழ்வைக் காணலாம். அப்பத்தின் அருளடையாளம் இயேசுவின் உடலும் இரத்தமுமான நற்கருணையின் அருளடையாளத்தையும், பலுகிப்பெருகியது, அவரைப் பின்பற்றும் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் வலுவூட்டி உணவளிப்பதையும் முன்னறிவிக்கிறது.

இரண்டாம் வாசகத்தில் எபேசியர்களைப் போலவே , ஒரே இறைவனில் நாம் பெற்றுக்கொண்ட திருமுழுக்கிற்கு தகுதியானவர்களாக இருக்க நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். சேவை, தன்னலமற்ற, மென்மையான மற்றும் பொறுமையுள்ளவர்களாக இருக்கவேண்டும். மற்றும் நம் தந்தையாகிய இறைவனில் ஒன்றித்திருக்கவேண்டும். நம்முடைய நம்பிக்கைக்காகவும், துணிவிற்காகவும் தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம்.

தாத்தா பாட்டிகள் அவர்களுடைய நம்பிக்கை மற்றும் வாழ்க்கை அனுபவத்தை இளைய தலைமுறைகளுக்குக் கடத்தி தலைமுறைகளைகளுக்கிடையே ஒருங்கிணைப்பவர்கள்.

திருத்தந்தை பிரான்சிஸ்







### இன்றைய இறைவார்த்தை:

எரேமியா 23:1-6

திபா: 23: 1-6

எபேசியர் 2: 13-18

மாற்கு: 6: 30-34

INTERNAL CIRCULATION ONLY
BUL 30/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org